Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணுமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசுஹு ஆடி - ஆவணிமீ 1965 ஆகஸ்ட்	பகுதி 5

MEMBERS OF THE EDITORIAL BOARD

1. Sri A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 பை.

பொருளடக்கம்

1. மறைந்தும் மறையாத மாணிக்கம் ... 81

2. Office Bearers ... 83

3. The 55th Madras State Educational Conference ... 85

4. பல் சொத்தைக்கு உணவுப் பழக்கம் காரணம் ... 87

5. ஒரே வழி ... 88

6. 55-வது தென்னிந்திய ஆசிரியர் சங்க மகாநாடு, காரைக்குடி-3 ... 89

7. கல்வி எதிரொலி (ECHO) ... 92

Printed by Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and Published by Sri L. Mariapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

பாலர் கல்வி

தொகுதி 30	விசுவாவசு ஞு ஆடி—ஆவணி மீ 1965—ஆகஸ்ட்	பகுதி 5

மறைந்தும் மறையாத மாணிக்கம்

மயிலாப்பூர் — சென்னை அதிமேற்றிராணிய ராக விளங்கிய லூயிஸ் மத்தியாஸ் அவர்கள் லெக்னாஜே என்னும் இடத்தில் மறைந்தார். நம் மறையாத மாணிக்கமுமானார். கல்வியுலகம் இன்று ஒரு சிறந்த கல்வி வல்லுனரை இழந்து கலங்கி நிற்கின்றது. குறிப்பாகத் தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கம் ஓர் உண்மையான நண்பரைப் பெருமைமிக்க வழிக்காட்டியை இழந்து வருந்து கிறது.

அவர் தென்னிந்திய ஆசிரியச் சங்கத்துடன் கால்நூற்றாண்டுக்குமேல் தொடர்பு கொண்டிருந் தார்; மாநிலக் கல்விவாரக் கொண்டாட்டத்தைப் பலமுறை துவக்கி வைத்துள்ளார். இது நமது சங்கத்திற்குப் பெருமையும் பூரிப்பும் தருவதாகு மன்றோ?

பிரான்சில் பிறந்த அவர் இந்தியாவைத் தமது தாயகமாகக் கொண்டார்; அத் தாய்நாட் டில் ஓராண்டல்ல ஈராண்டல்ல, முப்பதாண்டுகள், ஒரு துறையிலுமல்ல, இரு துறையிலுமல்ல பல் வேறு துறைகளில் பணிபுரிந்து வந்திருக்கிறார். அவரால் அவர் ஆதரவால், ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படும் அளவிறந்த பள்ளிகள், இந்நாட்டு இளஞ் சிறுவர் சிறுமியர்களின் கல்வி முன்னேற் றத்தில் எந்த அளவுக்கு அவர் ஆர்வம் காட்டினார் என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லாமற் சொல்லிக் காட்டுகின்றன நமக்கு. இலட்சக் கணக்கில் வெள்ளிக் காசுகளை அள்ளிக் கொட்டிக் கட்டப்பட்ட கத்தோலிக்கு சென்டர் அவரது பரந்து விரிந்த உள்ளத்தின் உயர் பண்புகளையெல் லாம் வெளியுலகிற்குப் பறையறைந்து காட்டு கிறது.

அன்றாட வாழ்க்கைக்கே மன்றாடுகின்ற ஏழை களை என்றும் மறந்தது கிடையாது. ஏழைக்கு ஆற்றும் தொண்டே, எல்லாம் வல்ல இறைவ னுக்கு ஆற்றும் தொண்டு என்பது அவர் துணிவு.

மாநிலக் கல்வி வாரக் கொண்டாட்டம் ஒரு முறை திருவல்லிக்கேணியில் திகழும் கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் நடந்தது. அதற்குத் தலைமை தாங்கிய அதிமேற்றிராணியார் அவர்கள் "அறியாச் சிறுவர்களுக்கு அறிவு புகட்டும் தொழில் புனிதமிக்கதாகும்; ஆதலால் அத் தொழில் செய்யும் ஆசிரியர்களும் புனிதர்க ளாவார்கள்" என்று கூறினார். நாட்டின் குழந்தைகட்கெல்லாம் அவர் உண்மைத் தந்தையா ராகவும், உயர் வழிகாட்டியாகவும் ஒளிர்ந்தார் எனக் கூறல் மிகையாகுமா?

சாக்ளா குழுவிற்குச் சமர்ப்பிக்க விண்ணப்பம் ஒன்று தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தால் தயா ரிக்கப்பட்டது. அப்போது அதிமேற்றிராணியார் அவர்கள் சங்கத்திற்கு வந்து இறுதியாகப் பேசுகையில், தனிப்பட்டோர் நடத்தும் பள்ளி களில்தான் திறமை திகழும் என்றும், அப்பள்ளி களால்தான் கல்வித் துறையில் அரசியல் ஊழல் கள் புகாதவாறு தடுத்தற்கியலும் என்றும் கூறி னார். கல்வி தேசிய மயமாக்கப் பட்டால் ஆசிரி யர்கள் ஆசிரியர்களாகப் பணிபுரியமாட்டார்கள்; கூலிக்குழைக்கும் கூலிக்காரர்களாய் விடுவார்கள் என்பதவர் கருத்து. சில மாநில அரசுகள் தனிப் பட்ட பள்ளிகளின் உரிமைகளில் தலையிடுவது அவருக்குப் பிடிக்கவில்லை. நாட்டின் இளை யோரைப் பண்பில் சிறந்தோராகவும், அறிவில் உயர்ந்தோராகவும், ஆன்ம வளர்ச்சியில் மேலோ ராகவும் உருவாக்குவதே கல்வியின் பெருநோக்க மாகும் என்றார் அவர். உடலை வளர்த்து உள்ளத்தை வளர்க்காத கல்வி கல்வியாகாது. அக்கல்வியைப் பெறுவோர் மக்களாக இருக்க

முடியாது; மாக்களாகத்தான் இருக்கமுடியும். அவர்களால் உலகம் வாழாது. இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்ற கருத்துரை வழங்கினார் அவர்.

இறுதி நாள் வரைக்கும் மக்கள் உயிர்க்கு உறுதிபயக்கும் செயல்களையே செய்து கொண்டிருந்தார் அப்பெருந்தகையார். அவர் கட்டிய பல பள்ளிகளும், காப்பாற்ற முடியாமல் கைவிடப்பட்டோருக்காகக் கட்டப்பட்ட பல விடுதிகளும் கீழ்ப்பாக்கத்தில் விளங்கும் அலுவலகமும் (Mercy Home) தமிழகத்தின் தலைநகராம் சென்னையின் வடக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் ஏழைகள் வாழ்வதற்கென்றே கட்டிவிடப்பட்டுள்ள குறைந்த வாடகைக் குடியிருப்புக்களும் கண்ணில்லா, வாயில்லாக் கண்மணிகளும் பயன்மிக்க வாழ்க்கையைப் பாரதத்தில் நடத்துதற்கு அடையாற்றில் அருமையாகக் கட்டிவிடப்பட்டுள்ள செயின்ட் லூயி நிறுவனமும் அவரது தூய தொண்டுள்ளத்தின் சின்னங்களாகத் துலங்குகின்றன. கத்தோலிக்கக் கல்விக் குழுவின் தலைவராக விளங்கிய அவரின் ஆதரவில் எழுப்பப்பட்ட பள்ளிகளிலும், அனாதை விடுதிகளிலும் ஆயிரமாயிரம் குழந்தைகள், (பெரும்பாலோர் கத்தோலிக்கர் அல்லாதார்) மறைந்த மாணிக்கம் ஆதிமேற்றிராணியார் அவர்கள் நாட்டின் கல்வி வளர்ச்சியில் எந்த அளவிற்கு ஆர்வமும், அக்கறையும் காட்டினார் என்பதை எடுத்துச் சொல்லும் நடமாடும் திருவுருவங்களாகத் திகழ்கின்றன. "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" என்ற உண்மையை உணர்ந்த அவர் 1955-ஆம் ஆண்டு பேசின்பிரிட்ஜுக்கு அருகில் செயின்ட் ஜோசப்ஃ தொழிற் பள்ளிக்கூடத்தை நிறுவினார். அங்கு இளைஞர்கட்குத் தச்சுத் தொழில் அச்சுத் தொழில் போன்ற பல தொழில்கள் நன்கு கற்பிக்கப்படுகின்றன.

தொண்டொன்றே மூச்சாகக் கொண்டு வாழ்ந்த
தூயோனின் வழியினிலே செல்வோம் யாமே

வணக்கம்.

★

Office Bearers



Sri A. K. Sitaraman B.A., L.T.
President

Sri L. Mariapragasam B.A., L.T., J.P.
General Secretary

Sri V. Anthoniswami M.A., L.T.
Vice-President



Sri R. Rajamanickam



Sri Frank Doraiswami M.A., M.ED. (Ele. Edn.)

Office Bearers



Sri V. Perumal
Vice-President



Sri R. Gnanamuthu
Vice-President

Sri V. S. Saravanan
Treasurer



Sri M. S. Arulswamy
Joint-Secretary

Sri V. Meenakshisundaram
Convener Vigilence Committee

The 55th Madras State Educational Conference

SECTION CONFERENCE REPORT—ELEMENTARY

2-6-65 பிற்பகல் 2½ மணிக்கு அழகப்பா ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக் கலையரங்கில் தென்னிந்திய ஆசிரியக் கழகத்தின் 55 ஆவது கல்வி மாநாட்டின் உட்பிரிவாகிய [Sectional Conference] தொடக்க ஆசிரியர் கருத்தரங்கு சென்னை உயர் திரு. ஜி. கிருஷ்ண மூர்த்தி M.L.C. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி சானகி மோசஸ் இறைவணக்கம் பாடினார்கள். அமைப்பாளர் திரு M. S. அருள்சாமி தம்முடைய வரவேற்பில் இன்றைய தொடக்க ஆசிரியர்களின் நிலையையும், அரசாங்கப் பணியையும் பற்றிக் கூறியதோடு, மறுமலர்ச்சிக்கான தீர்மானங்களை ஆசிரியர்களை உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

தலைவர் தம்முடைய தொடக்க உரையில் ஆசிரியர்கள் தம்முடைய பணியோடு அறிவை விருத்தி செய்து கொள்வதற்காகப் பல நூற்களைப் படித்து மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வழிவகை காண வேண்டும் என்றும், அதே நேரத்தில் ஆசிரியர்களுடைய தரத்தையும், ஊதியத்தையும் உயர்த்த அரசாங்கம் வழி வகுக்க வேண்டுமென்றும், ஆசிரியர்களின் உரிமைகளைப் பெற கிளர்ச்சி செய்துதான் ஆகவேண்டும் என்மல், கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்குவதுபோல் ஆசிரியர்களுக்கும் உணவு, உடை வழங்கப் பட வேண்டுமென்றும், குறைந்தது ரூ. 100 ஆவது ஆசிரியர்களுக்கு அடிப்படை ஊதியம் அளிக்கப் பட வேண்டுமென்றும், குறைந்த ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்குக் கூடுதலான கிராக்கிப் படி வழங்க வேண்டுமென்றும், இலவச மருத்துவ வசதி, வீட்டு வாடகைப் படி போன்ற சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்கு அளிக்கும் பென்சன் உயர்த்தப் பட வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறினார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் ஆரம்ப ஆதாரக் கல்வி எந்நிலையில் உள்ளது என்பது பற்றியும் திருவாளர்கள். V. சரவணன்; S. கணபதி; P. தமிழரசு; C. இராயப்பன்; R. இராசமாணிக்கம்; M. கோவிந்தராசன்; D. செபஸ்தியான்; A. நற்குணம் ஆகியோர் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினார்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ஆரம்ப ஆசிரியர்களே ஒரு நாட்டின் பண்பையும் நாகரிகத்தையும் உருவாக்கும் சிற்பிகள் என்பதை மனத்தில் கொண்டு எல்லா வழிகளிலும் அவர்களின் கௌரவம் உயர்த்தப்பட வேண்டும் (சம்பளம், வீட்டு வசதி, மருத்துவ வசதி, குழந்தைகள் கல்வி வசதி முதலியன.) என மாநாடு தீர்மானிக்கிறது.

2. ஒரு ஆசிரியர் எந்த நிறுவனத்தில் பணி புரிந்தாலும், நிறுவன மாற்றத்தால் ஊதியம், ஊழியம்—பாதிக்கப்படக் கூடாது. (தனியார் துறை, பஞ்சாயத்து, முனிசிபாலிடி)

3. மாணவர்களுக்கு அளிக்கும் இலவச மதிய உணவோடு புத்தகம், உடை முதலிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். தற்பொழுது, இலவச உணவுக்காக வழங்கும் 0.10 காசுகளை, 0.20 காசுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

4. செக்கண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எந்த வகுப்புப் போதித்தாலும் அவர்களுக்குச் செக்கண்டரி கிரேடு ஊதியம் கொடுக்கப் பட வேண்டும்.

5. சட்ட மன்றத் தேர்தல், ஊராட்சி மன்றத் தேர்தல், குடிக் கணக்கு (Census) ஆகிய தேசீயப் பணிகளில் ஆசிரியர்கள் தொண்டு புரிவதற்கு அக்காலங்களில் உரிய பயணப்படியும் தினப்படியும் முன்பணமாக (Advance) வழங்கப்பட வேண்டும்.

6. ஹையர்கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர் S. S. L. C. தேர்வு பெற்றவுடன் அவரைச் செகண்டரி கிரேடு ஆசிரியராகக் கருதிச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும். மறுமுறையும் போதனு முறைத்தேர்வு எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

8. இந்திய சர்க்கார் எல்லா நிலை ஆசிரியர் குழந்தைகளுக்கும் (60% மதிப் பெண் பெற்ற) இந்தியா முழுமைக்கும் 500 ஸ்காலர்ஷிப்கள் கொடுப்பதைக் கோட்டா முறை இன்றித் தகுதி பெற்ற எல்லா மாணவர்களுக்கும் மதிப் பெண்கள் வரம்பை 50 ஆகக் குறைக்க வேண்டும்.

7. கிராமப் புறங்களில் (உயர்நிலைப்பள்ளி இல்லாத இடம்) பணிபுரியும் ஆசிரியர்களின் குழந்தைகளை ஆஸ்டல்களில் (Hostel) தங்கிப் படிப்பதற்கு ஆண்டிற்கு ரூ. 300/- மானியம் வழங்கப்படல் வேண்டும். தொழிற் பயிற்சி, மருத்துவம், பொறியியல் போன்ற மேல் படிப்புகளுக்கு நீண்ட காலக் கடன் வசதி அளிப்பதுடன் புத்தகம் ஆகிய இதர செலவுகளுக்கு உரிய ஸ்காலர்ஷிப்களும் (Sholarship) வழங்கப்படல் வேண்டும்.

9. ஆரம்ப, உயர் ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நியாயமான கடமைப் படியும்,

சாதல் வார் செலவுகளுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை இராச்சியம் முழுவதிலுமுள்ள எல்லா நிறுவனங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியாக வழங்கப்பட வேண்டும்.

10. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 100—3—115—6—175 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 150—5—175—10—275 ஆகவும் ஊதியங்களைத் திருத்தியமைத்து உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

11. ஆசிரியர்கள் வாழ்க்கையில் வெற்றி மனப்பான்மை தளிர்க்கும் பொருட்டு மேல் படிப்புகளுக்கு ஊக்குவிக்கத் தேர்வுகாலங்களுக்கு ஒரு மாதப் படிப்பு லீவு (Study Leave) வழங்கப படுவதோடு, தேர்வுக்கட்டண முழுச் சலுகையும் அளிக்கப்பட வேண்டும்.

12. கிராமப் புறங்களில் பரந்துகிடக்கும் தரிசு நிலங்களை வழங்குவதில் ஆசிரியர்களுக்கு முதலிடம் அளித்துக் கூட்டுறவு உழவு முறை வெற்றிக்கு அவர்களைப் பயன்படுத்தவேண்டும்.

13. ஆசிரியர்களிடமிருந்து வசூலிக்கும் (Enhanced T.P.F.) அவசரகால நலநிதியைக் திருப்பிக் கொடுப்பதுடன், உடனடியாக இத்திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

14. ஆசிரியர் நலநிதிக்குப் 10% ஆசிரியர்களும் 10% அரசாங்கமும் செலுத்த வழிவகை காணவேண்டுமாய் மாநாடு தீர்மானிக்கிறது.

15. ஆரம்ப ஆசிரியர்களின் சரித்திர, சமுதாய, நாகரிக அறிவு வளர்ச்சி அடையும் பொருட்டு ஆண்டுக்கு ஒரு முறை இந்தியா முழுமைக்கும் சென்று பிற இடங்களைக் காணும் பொருட்டு இலவச இரயில் பயண அனுமதி (Concession) அளித்து ஊக்குவிக்கவேண்டும். பிற மாநிலங்கள், பிற நாடுகளுடன் ஆசிரியர்களுக்கு இணைப்பு ஏற்படுத்த அரசாங்கம் முன் வரவேண்டும்.

16. ஆசிரியர்கள் தினவிழாவை நாடெங்கும் மக்களுடன் கலந்து சிறப்பாக நடத்துவதற்கான வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தித்தர வேண்டும்.

17. ஆசிரியர்களுக்கு ஓய்வு காலநிதி (Pension) மிகவும் குறைவாக இருப்பதால் குறைந்தது ரூ. 30 ஆவது உதவி நிதியாக அளிப்பதுடன், ஓய்வு காலநிதி பெற இயலாத ஆரம்ப ஆசிரியர்களுக்கும் முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் ஓய்வு காலநிதி வழங்கப்படவேண்டும்.

18. செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு வழங்கும் கிராக்கிப்படியைப் போல ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் கிராக்கிப்படி கொடுக்க வேண்டும்.

19. தொடக்கக் கல்வியில் அரசாங்கம் சீர் திருத்தம் செய்யும் காலங்களில் அனுபவமிகுந்த தொடக்க ஆசிரியர்களையும் பிரதிநிதிகளாகச் சேர்த்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

20. உயர் தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களை (Craft Instructor or P. V. I.) முழுநேர ஆசிரியர்களாகப பாவித்து அவர்களுக்கு முழுநேர ஊழியர்களுக்கு அளிக்கும் ஊதியம் அளிக்கவேண்டும்.

21. வீண்கால தாமதத்தைத் தவிர்த்து உடனடியாகக் கடனை அளித்து உதவுமாறு மாநாடு தீர்மானிக்கிறது.

22. ஆசிரியர்களோ அல்லது ஆசிரிய நிர் வாகிகளோ காசோலையை (Cheque) மாற்றுவதற்கு அரசாங்கக் கருவூலத்திற்கோ அல்லது வங்கிகளுக்கோ சென்றால் அந்நாளை (on Duty) வேலைநாளாகக் கருதவேண்டுமென்று மாநாடு தீர்மானிக்கிறது.

23. தொடக்க, உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு அரசாங்கம் அளிக்கும் நிர்வாக மானியத்தைக் (Maintanance Grant) குறைந்தது 25% வது உயர்த்திக் கொடுக்குமாறு மாநாடு தீர்மானிக்கிறது.

24. அரசாங்க ஊழியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் அளிப்பதுபோல் தனியார் நிர்வாகப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பண்டிகை முன்பணம் (Festival advance) வழங்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமாய் மாநாடு தீர்மானிக்கிறது.

25. மலைப்பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு (Hill Allowance) முன்போலவே 50% மலைப்பகுதி படியை உடனடியாக கொடுப்பதுடன், பிடிக்கப்பட்ட தொகையையும் திருப்பி அளிக்கும் படியாக மாநாடு தீர்மானிக்கிறது.

26. உயர்தொடக்கப்பள்ளியில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குக் கிரேடு வாரியாக உரிய ஊதியம் வழங்கவேண்டுமாயும் உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செல்லும் பொழுது அவர்களுடைய ஊழியம், ஊதியம் ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் மாநாடு தீர்மானிக்கிறது.

இறுதியாகத் தலைவரவர்களின் முடிவுரைக்குப் பின் அமைப்பாளரால் நன்றி கூறப்பட்டு மாநாடு வெற்றியுடன் முடிவடைந்தது.

M. S. அருள்சாமி

கன்வீனர்

3—6—65

தொடக்க ஆசிரியர் மாநாடு கருத்தரங்கு,

காரைக்குடி

பல் சொத்தைக்கு உணவுப் பழக்கம் காரணம்

மக்களுடைய அந்தஸ்து உயர உயர அவர்களுடைய பற்கள் சிதைவு அதிகரிக்கிறது என்று பல் ஆரோக்கியம் பற்றிய புள்ளித் தகவல் கூறுகிறது. இப்போது ஆப்பிரிக்க மக்களுடைய வாழ்க்கை நிலை இந்தக் கூற்றை மெய்ப்பிக்கிறது.

(பால் வாகன்)

பேராசிரியர் அலெக்ஸாண்டர் மக்கிரிகர், பெர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியப் பிரிவுப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். கானாவில் பல் வைத்தியப் பணியை நிறுவுவதற்கான ஆலோசனைகளை அரசாங்கத்திற்குக் கூறுவதற்காக அவர் அண்மையில் கானாவுக்குச் சென்றிருந்தார். கானாவில் பல மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 1500 பேர்களை அவர் பரிசோதனை செய்தார். பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள மக்களைவிட கானா மக்களுக்கு பல் நோய்கள் குறைவு என்றாலும் குறைந்த வருமானமுள்ள கிராம மக்களைவிட, அதிக வருமானமுள்ள ஆசிரியர்கள், நர்ஸுகள் முதலியவர்கள் பல் நோய்களால் வருந்துகிறார்கள் என்பது அந்தப் பரிசோதனையிலிருந்து தெரிந்தது. மக்களுடைய வருமானம் பெருகப் பெருக அவர்களுடைய பற்சிதைவும் அதிகமாக இருந்தது. வருமானம் அதிகமுள்ள மக்கள் ரொட்டி, சர்க்கரை, மிட்டாய்கள் முதலியவற்றை அதிகமாக உண்பதே பற்சிதைவுக்குக் காரணம். 1950-1960 ஆண்டுகளுக்கிடையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கானா இறக்குமதி செய்த மிட்டாய் முதலிய இனிப்புப் பண்டங்களின் அளவு ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது.

கானாவில் வயதுவந்தவர்களைவிட பன்னிரண்டு வயதுக் குழந்தைகளுக்குத்தான் சொத்தைப் பற்கள் அதிகம் இருப்பதாக பேராசிரியர் மக்கிரிகர் கண்டுபிடித்தார், பெரியவர்களைவிடக் குழந்தைகள்தாம் அதிகமாக மிட்டாய்கள் தின்கிறார்கள். ஆகையால் மிட்டாய்தான் பற்சிதைவுக்கு முக்கியக் காரணம் என்று ஊகிக்க முடிந்தது. வாழ்க்கைத் தரம் துரிதமாக முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் உணவு மாறுதல் காரணமாக - குறிப்பாக இனிப்புப் பண்டங்களை அதிகமாக உபயோகப்படுத்துவதன் விளைவாக - மக்களுக்கு பற்சிதைவு ஏற்படுகிறது என்று வேறு நாடுகளிலுள்ள விஞ்ஞானிகளும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

கானாவின் தெற்கு பகுதியில் செழிப்புல் ஐரோப்பிய நாகரிகத்தின் செல்வாக்கும் உண்டு. அங்கு வாழும் மக்கள் வடக்குப் பகுதியில் வாழும் மக்களைவிட அதிகமாக இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடுகிறார்கள். அதனால் பற்சிதைவும் நோய்களுமுடைய மக்கள் விகிதம் அதிகமாகயிருக்கிறது. வடக்குப் பகுதியில் வாழும் மக்கள் ஏழைகள்; பழைய பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கிறார்கள். பற்களின் மினுமினுப்பும் வலிமையும் குன்றிப்போய் வருந்தும் பலர் இந்தப் பகுதியில் இருப்பதை பேராசிரியர் மக்கிரிகர் கண்டுபிடித்தார். இது பல் நோய் அல்ல என்றாலும் பலவீனமான பற்களுக்கு அடையாளமாகும். வளரும் பருவத்தில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்துள்ள உணவுகள் குழந்தைகளுக்குக் கிடைக்காததன் விளைவுதான் இது என்று பேராசிரியர் மக்கிரிகர் கருதுகிறார். வட பகுதியில் வாழும் மக்களுக்கு, புரதச் சத்துமிக்க இறைச்சி, மீன், முட்டை போன்ற உணவுப் பண்டங்கள் தாராளமாகக் கிடைப்பதில்லை.

வாழ்க்கை நிலைமை மாறுதல்தான் பற்சிதைவுக்குக் காரணம் என்பதைக் கானா பரிசோதனை உறுதிப்படுத்துகிறது. கானா போன்ற புதிய சுதந்தர நாடுகளில் பல் வைத்திய வசதி விரிவாக ஏற்படுவது அவசியம் என்று 'பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னல்' அபிப்பிராயப்படுகிறது. முதல் எலிஸபெத் அரசியின் காலத்தில் வாழ்ந்த இங்கிலாந்து மக்களுக்கும் இப்போது கானாவிலுள்ள மக்களுக்கும் ஒற்றுமையிருப்பதாக அந்தப் பத்திரிக்கை கூறுகிறது. முதல் எலிஸபெத் ஆட்சிக் காலத்தில் பெருங்குடி மக்கள் சொகுசாக வாழ்ந்து இனிப்புப் பண்டங்களை அதிகமாகச்

சாப்பிட்டதால் பற்சிதைவு ஏற்பட்டு வருந்தினார்கள். நவீன ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய நாகரிகத்தின் செல்வாக்கும் வாழ்க்கை முன்னேற்றமும் காரணமாக மக்கள், இனிப்புப் பண்டங்களை ஏராளமாகச் செலவிடத் துணிந்தால் பற்சிதைவு என்பது பெரியதொரு பிரச்சினையாக வளர்ந்துவிடும் என்று அந்தப் பத்திரிகை எச்சரிக்கிறது.

என்ன நேர்ந்தாலும் சரி ஆபிரிக்கா நாடுகளில் பல் வைத்திய வசதி பெருகுவது அவசியம். துரிதப் போக்குவரத்து வசதிகள் பெருகிவரும் இந்நாளில் உள்ளூரில் விளையும் பொருள்களையும் சத்துநீக்காமல் உள்ளூரில் தயாரிக்கும் பண்டங்களையும் உண்பவர்கள் எண்ணிக்கை குறைவது இயல்பு. உணவிலுள்ள குறைபாட்டை ஆராய்ந்து ஊட்டம்மிக்க உணவே அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வழியைப்பற்றி விஞ்ஞானிகள் சிந்தித்தால் பற்சிதைவு-பல் நோய்கள் முதலியவற்றை தடுத்துவிடக் முடியும். மண்டல ரீதியில் மக்களுடைய வாழ்க்கை நிலைமைபற்றி ஆராய்ந்து தகவல்களைச் சேகரித்தால்தான், திட்டமிட்டுச் செயலாற்ற முடியும். இந்தப் பணியை உடனே தொடங்குவதும் அவசியம்.

★

ஒரே வழி

1. உய்வதற்கோர் பாதையுண்டே வெண்புருவே—அதில்
உய்யும்வண்ணம் செல்லுவேனே வெண்புருவே.

2. கடமையெல்லாம் கண்டுகொண்டே வெண்புருவே—அவை
உடைமையென்றே உன்னுவேனே வெண்புருவே.

3. தடையெதிர்த்து வந்துவிட்டால் வெண்புருவே—அதை
உடையச் செய்வேன் உறுதியோடு வெண்புருவே.

4. வாரமெல்லாம் வேலைசெய்வேன் வெண்புருவே—அது
பாரமென்றே எண்ணிடாமல் வெண்புருவே.

5. சோர்விலாமல் ஓய்விலாமல் வெண்புருவே—நானும்
ஆர்வத்தோடும் ஆவலோடும் செய்குவேனே.

6. வேலைக்குள்ளே மூழ்கிவிட்டால் வெண்புருவே—இந்தப்
பாலையெல்லாம் சோலையாகும் வெண்புருவே.

S. ரத்னம், M.A., B.T.
துணைப் பேராசிரியர்
அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமரபாளையம்.

55-ஆவது தென்னிந்திய ஆசிரியர் சங்க மகாநாடு
காரைக்குடி-3

தீர்மானங்கள்

1. பொதுத் தீர்மானங்கள்

1. இச்சங்கம், S. S. L. C. வகுப்புவரை இலவசக் கல்வியை அளித்ததற்குச் சென்னை அரசாங்கத்தைப் பாராட்டுகிறது.

2. 31-3-64 வரை ஆசிரியர் கிராண்டை அங்கீகரித்ததைக் குறித்து இச்சங்கம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. மேற்கண்ட 2-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் சிலர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள சம்பளத்திற்குச் சிறிது கூடுதலாகவே பெறுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அரசாங்க உத்தரவுகளின்படி அத்தகைய சம்பளத் தொகை வருடந்தோறும் சம்பளக்கூடுதலோடு சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். அரசாங்கச் சம்பளத் திட்டத்தின்படி உச்சவரம்பிற்கு அதிகப்பட்ட தொகையும் சில ஆசிரியர்கள் சம்பளமாகப் பெறுகிறார்கள். அத்தகையோரின் எண்ணிக்கை மிகக்குறைந்ததாகும். அன்றியும் ஆண்டுதோறும் அவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வரும். ஆதலால் பள்ளிக்கூட அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள சம்பளத்தை அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டு அவ்வாசிரியர்களுக்கு வருடவாரி சம்பள உயர்வு பெறும்படி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4. இச்சங்கம் ஆசிரியர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்தியதற்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் காலத்திற்கேற்ப ஆசிரியர்களின் ஊதியத்தையும், பஞ்சப்படியையும் உயர்த்துமாறு வேண்டுகிறது.

2. பாடத்திட்டம்

1. ஆசிரியச் சமூகம் கல்வியின்தரத்தை உயர்த்துவதற்காகப் பள்ளிப்பாடத் திட்டங்களில் குறிப்பாக விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் தேவையற்றவைகளை விலக்கியும், தேவையானவைகளை மட்டும் வைத்துக்கொள்ளவும் கோருகிறது.

2, இம்மகாநாடு, நான்காவது வகுப்பில் உள்ள ஆங்கிலத்தின் தரம் கடினமாக இருப்பதாகவும் அதைச் சிறிது சுலபமான முறையில் மாற்றவேண்டும் எனவும் கோருகிறது.

3. ஆசிரியர் சமூகம் கல்வியின்தரத்தை உயர்த்தப் பாடுபடுவதால் பாடத்திட்டம் தயாரிக்கும் பொழுது அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட இத்தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தைக் கலந்தாலோசிக்க வேண்டுகிறது.

3 அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி முதலியன

இம்மகாநாடு அரசாங்கத்தை வேண்டுவதாவது :

1. விரைவில் ஆசிரியருக்கான வீட்டு வாடகைப் படியும், மருத்துவ வசதியும் அளித்தல்.

2. செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குத் தரும் பஞ்சப்படியையே ஹையர்கிரேட் ஆசிரியருக்கும் அளித்தல்.

3. பி. யு. சி. அல்லது இன்டர்மீடியட் வரை படித்துள்ள செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் B.A., பரீட்சையில் தேறும்வரை கூடுதலாக ரூ. 10 தரவேண்டும். B. A., பரீட்சையில் தேறிய உடன் B.T.-க்குத் தங்களைத் தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ளும் வரை ரூ. 10 அளிக்க வேண்டுகிறது.

4. 1-4-1958க்குப் பிறகு செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகத் தகுதி பெற்றவர்கள். அவர்கள் எந்த வகுப்பு ஆசிரியர்களாக இருந்தாலும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குரிய சம்பளத் திட்டப்படி சம்பளம் வழங்கவேண்டுமென்பது.

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி ஆசிரியர்களின் சம்பள விகிதங்களைத் திருத்தவேண்டியது:–

(1) ஹையர் கிரேட் :	100-3 -115-6 -175
(2) செகண்டரி கிரேட் :	150-5 -175-10-275
(3) B.T. ஆசிரியர் :	200-10-250-20-450
(4) தலைமை ஆசிரியர்கள் :	300-15-450-20-550
(5) 2-ஆவது கிரேட் தமிழ் ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், டிராயிங் ஆசிரியர்கள் முதலியோர்	150- 5-175-10-275

செக்ரடேோரியல் ஆசிரியர்கள்.-பொறியியல், டெக்ஸ்டைல் ஆசிரியர்களின் தகுதியைப் போல.

(6) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு அலவன்சுகள் தரப்படவேண்டியவை :

(1) தேகப்பயிற்சி ஆசிரியர்கள் (ஹையர் கிரேட் ரூ. 25)

(2) கமர்ஷியல் இன்ஸ்ட்ரக்டர்கள் ரூ. 25

4. ஓய்வுபெறும் வயது

1. இம்மகாநாடு ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 வயதாக உயர்த்த வேண்டும் என்றும், அதற்குத்தகுந்தவாறு M.E.R.-ல் ஓர் திருத்தம் வெளியிட வேண்டுமென்றும்,

2. பென்ஷன் கணக்கிடும்பொழுது ஆசிரியர்களின் வயது 55 தாண்டிய பின்னும் அதிலிருந்து கணக்கிடும்படியும் வேண்டுகின்றது.

5. பென்ஷன்

இம்மகாநாடு அரசாங்கத்தை வேண்டுவதாவது :

1. 1-4-1955-க்கு முன் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு எக்ஸ்-கிரேஷியாவாக (Ex-Gratia) ரூ. 30 அலவன்ஸ்தர வேண்டுகிறது.

2. எந்த ஒரு ஆசிரியரும் ரூ. 30-க்குக் குறைவாகப் பென்ஷன் சட்டத்தைத் திருத்தவேண்டுகிறது.

3. போதனை-ஆசிரியராக இல்லாத ஏனையோருக்கும் பென்ஷன் திட்டத்தை விரிவு படுத்த வேண்டும்.

4. பென்ஷன் வாங்கும் ஆசிரியர்களுக்குப் பஞ்சப்படி அளிக்க வேண்டுகிறது.

5. பென்ஷன் விதிகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது அரசாங்கம் அவைகளைத் துரிதமாகச் செய்யவேண்டுகிறது.

6. மேலும் இம்மகாநாடு (a) ஆசிரியப் பென்ஷன்தாரர்களை "ராஜ்யப் பென்ஷன்தாரர்" (State Pensioner) ஆக அறிவிக்கவேண்டுகிறது. (b) மற்றவர்கள் குறைந்தபட்ச பென்ஷன் G. O. 1-4-1964-லிருந்து பெறுவதைப்போல் ஆசிரியர்களுக்கும் விரிவாக்க வேண்டுகிறது.

1-4-1964 முதல் தற்காலிகக் கூடுதலாக ரூ. 10 ஆசிரியர்களுக்கு அளிக்கவேண்டுகிறது.

7. இம்மகாநாடு, தற்பொழுது ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, மனக்கசப்பு இல்லாமல் பென்ஷன் அளிக்க வேண்டுகிறது.

6. விடுமுறைகள்

இம்மகாநாடு அரசாங்கத்தை வேண்டுவதாவது :

1. அரசாங்கச் சிப்பந்திகளுக்கு 3 நாட்கள் மத சம்பந்தமான விடுமுறைகள் அளிப்பதுபோல் ஆசிரியர்களுக்கு அவ்விடுமுறைகள் அளிக்க மறுப்பதால் காஷுவல் லீவை 12லிருந்து 15 நாட்களாக்கக் கோருகிறது.

2. (a) உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்குச் சீரான லீவ் ரூல் இருப்பதுபோல் உதவி பெறும் செகண்டரி பள்ளிகளுக்கும், நகராட்சிப் பள்ளிகளுக்கும் இருக்கவேண்டும்.

(b) உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க, அரசாங்கச் சிப்பந்திகளுக்கு இருக்கும் ரூல்களை அமுல் நடத்த வேண்டும்.

3. ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் இலவச மருத்துவ வசதி அளிப்பதோடுகூட, அவர்கள் இஷ்டப்பட்ட டாக்டர்களிடம் வைத்திய சோதனை செய்ய அனுமதிக்க வேண்டும்.

4. மேற்பார்வைப் படிப்பை (Supervised Study) வற்புறுத்தாமல் அதை மனப்பூர்வமாகவே செய்யும்படியாகச் செய்யவேண்டும்.

5. மாதாந்திரப் பரீட்சை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தாமல் ஆசிரியர்கள் இஷ்டப்படி நடத்த அனுமதிக்க வேண்டும்.

6. கல்வியைப் பற்றியும், ஆசிரியர்கள் குறைகளை எடுத்துச் சொல்லும் பொருட்டு மேற்சபையில் ஆசிரியர் தொகுதியை நீடிக்க வேண்டுகிறது.

7. ஆரம்பப்பள்ளியில் வேலை செய்யும் எல்லா செகண்டரி பள்ளி ஆசிரியர்களுக்கும், செகண்டரி பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கும் சம்பளத்தையே அளிக்கவேண்டும்.

8. தமிழ், தெலுங்கு, ஹிந்தி பண்டிதர்களுக்கு அவர்கள் தகுதியைக் குறித்தும், கற்பிக்கும் வகுபின் தன்மைக்கும் தகுந்தவாறு சம்பளம் தரப்பட வேண்டும்.

9. ஆசிரியர்கள், பள்ளியில் வேலை செய்யும் ஏனைய சிப்பந்திகளுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டும்.

10. ஆரம்பப்பள்ளியை விட்டு உயர்தரப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சம்பளம்

அளிக்கும் விஷயத்தில் அவர்கள் பணியாற்றிய ஆரம்பப்பள்ளியின் சேவையையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும்.

11. எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் உதவி மேற்பார்வையாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தினப்படி ஊதியம் ரூ. 4 ஆக அளிக்கப்படுகிறது. ஆகவே அத்தொகையை ரூ. 6 ஆக உயர்த்த இம் மகாநாடு யோசனை கூறுகிறது.

7. ஏனைய தீர்மானங்கள்

இம்மகாநாடு அரசாங்கத்தை வேண்டுவதாவது :

1. தேசிய நெருக்கடியின் காரணமாகத் தனிப்பட்ட ஆசிரியர்களுக்கு அளித்து வந்த ரயில்வே சலுகையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுகிறோம்.

2. கல்வி சம்பந்தமான மகாநாடுகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு (on duty) என்ற ஹோதாவில் அவர்களுக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்.

3. படித்து அனுபவம் பெற்ற ஒருசில ஆசிரியர்களுக்கு ஜில்லாக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றச் சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும்.

4. தேர்தல் காலங்களிலோ அல்லது, புள்ளி விவரங்கள் எடுக்கும் நேரங்களிலோ ஆசிரியர்களுக்குப் போதிய முன்னறிவிப்பு அளிக்கவேண்டும். அவ்வாறு அளிப்பதால் அவர்கள் அவ்வேலையைச் செய்வதற்குப் பள்ளியில் ஏற்பாடுகள் செய்து வருவார்கள்.

5. தங்கள் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் எல்லா விடுமுறைகளிலும் ஆசிரியர்கள் வெளியூர்களுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும். (Rc A9, No. 29-696/64 – 29-12-64 என்ற தஞ்சை ஸ்பெஷல் ஜில்லா கல்வி அதிகாரியின் உத்தரவு வரும் விடுமுறையின்போது வெளியூருக்குச் செல்லக் கூடாது என்று கோருகிறது.)

6. மேலும் இம்மகாநாடு பெண்கள் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் ஆண் ஆசிரியர்களைத் தொடர்ந்து ஆசிரியராக வைத்துக்கொள்ள வேண்டுகிறது.

★

ஓர் அறிவிப்பு

ஆசிரியர்கள் கல்வி தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாக வெளியிடவும் விரும்பினல், தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் திகழும் திருவாளர் மரியப்பிரகாசம் J. P. அவர்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அமல நிலையம்

6, கச்சேரி ரோடு,

மயிலை, சென்னை - 4

கல்வி எதிரொலி
(EDUCATION ECHO)

தமிழாக்கம்: ஆ. குப்புசாமி

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு (World Confederation of Organizations of the Teaching Profession)

ஜமெய்க்காவில் கல்வி முன்னேற்றம்

கடந்த சனவரித் திங்களில், ஜமெய்க்கா ஆசிரியர்ச் சங்கத்தால் (Jamaica Teachers' Association) நடத்தப்பட்ட முதலாண்டு மாநாட்டில் அமைக்கப்பட்ட, கல்வித் திட்டக் குழு (Educational Planning Committee) பத்தாண்டுத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளது.

மேற்குறித்த மாநாட்டின் பொருள் 'தேசியக் கல்வி' என்பதாகும். அப்பொருள் பற்றித் தொடர்ந்து ஆராயும் நோக்கத்துடன் தான் கல்வித் திட்டக்குழு நிறுவப்பட்டது.

எண்பது அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கூட்டமொன்று, அண்மையில் அக்குழுவால் நடத்தப்பட்டது. கிறித்துவ சமயம், தொழில், வாணிபம், விவசாயம், பயணம், தொழிற் சங்கங்கள், பல்கலைக் கழகம் ஆகிய துறைகளிலிருந்து வந்த பேச்சாளர்கள். ஜமெய்க்காவில் கல்வித் துறையை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை அக்குழுவின் முன் வைத்தனர். அதே கூட்டத்தில் தேசியக் கல்விக்குழு (National Council on Education) ஒன்றும் நிறுவப்படவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி நல்கும் நோக்கத்துடனும், இளைய-முதியோரிடையுள்ள அறியாமையை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அகற்றும் நோக்கத்துடனும் இயக்கம் ஒன்று நடத்துவதென ஒரு குழு இப்போது திட்டமிட்டு வருகிறது.

மாபெரும் ஈடுபாடு

ஆரம்ப, இடைத்தரக் கல்வி முன்னேற்றத்திற்கு 1·3 மில்லியன் டாலர்கள் செல விடுவதென, அமெரிக்க அரசாங்கம் ஒரு மசோதா நிறைவேற்றியுள்ளது. நாட்டின் தொடக்க நிலைக் கல்வியும் இடைத்தரக் கல்வியும் மேன்மையுற அமெரிக்க அரசு தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மாபெரும் ஈடுபாடு இதுவெனக் கூறலாம்.

முன்னாள் ஆசிரியரும், இந்நாள் குடியரசுத் தலைவருமான லிண்டன் B. ஜான்சன், ஏப்ரல் 11-ஆம் நாள் அம்மசோதாவில் கையெழுத்திட்டதும் அது சட்டமாயிற்று.

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கு எளிதில் கிடைக்காத பள்ளி வசதிகள் செய்து தருதல் போன்ற சிறப்புத் திட்டங்களை ஆதரிக்கும் நோக்குடன் மேற் சொன்ன நிதியின் பெரும்பகுதி செலவழிக்கப்படும். நூலகங்களின் எண்ணிக்கையை உயர்த்துதற் காகவும், பாட புத்தகங்களுக்காகவும், மாதிரிப் பள்ளித் திட்டங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிக் காகவும், கல்வித்துறை ஆராய்ச்சி, பயிற்சிக்காகவும், ஆசிரியத் தொழிலையே தம் வாழ்நாள் தொழிலாகக் கொண்டுள்ள ஆசிரியர்ச் சங்கங்களின் ஆராய்ச்சிக்காகவும் மேற்சொன்ன நிதியிலிருந்து பணம் செலவழிக்கப்படும்.

அறிஞர் அரங்கத்தைத் தொடர்ந்து நடந்த 'யூனி' கூட்டம் நடக்கும் போது, 'யூனியையும் 'விக்டாப்புடன்' இணைத்துவிட வேண்டும் என வேண்டிக் கொள்ளும் வேண்டுகோள் தாளில் 'யூனியின்' அலுவலர்களும், மாகாணச் சங்கங்களின் தலைவர்களும் கையெழுத்திட்டு, 'விக்டாப்பின்' தலைமைச் செயலாளர் G. காருக்கு அனுப்பப்பட்டது. ஆடிஸ் அபாபாவில் நடைபெறவிருக்கும் பேராள் கூட்டத்தில் இவ்வேண்டுகோள் செயல்படுத்தப்படும்.

தலைமைச் செயலாளருக்கு வந்த மடல்கள்

'யுனெஸ்கோ' தலைமை இயக்குநர் ரீனே மாஹ்யூவும், உதவித் தலைமை இயக்குநர் கபிரியல் பெடான்கர்–மீஜியாவும் 'விக்டாப்' தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் அவர்களுக்கு மடல்கள் வரைந்துள்ளனர். அம்மடல்களில், 'விக்டாப்பும்' 'யுனெஸ்கோவும்' எதிர்காலத்தில் ஒத்துழைப்பது சம்பந்தமான புதுத்திட்டங்களும், ஏற்பாடுகளும் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

'யுனெஸ்கோவின்' தலைமை இயக்குநர் மாஹ்யூ, டாக்டர் கார் அவர்களுக்குக் கீழ்க்கண்ட கருத்தமைந்த மடலொன்று எழுதியுள்ளார்.

பரந்த அளவில் அமைக்கப்பட்டதும், பலவிதத் திட்டங்களை உள்ளடக்கியதுமான ஒரு கல்வித் திட்டத்தை 1967—68-ல் செயற்படுத்த வேண்டுமென்று 'விக்டாப்' தலைமைச் செயலாளர் டாக்டர் கார் அவர்களும், 'யுனெஸ்கோவின்' தலைமை இயக்குநர் மாஹ்யூ அவர்களும் மனக்கண் முன்பு கற்பனை செய்து பார்க்கின்றனர் என்றும், அதற்காக அவ்விருவரும் தற்போது எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் முதல் முயற்சிகளே என்றும், கல்வித் துறையில் இவ்வாறு போடப்படும் அடிப்படைகளுக்கு அவர் (மாஹ்யூ) பெரும் முக்கியத்துவம் தருகிறார் என்றும், அவர்கள திட்டும் பொதுத் திட்டங்கள் பலவித முக்கிய அம்சங்களை உட்கொண்டுள்ளன என்றும், ஆசிரியர் களுக்கு மேலும் பயிற்சியளித்தலும், எழுத்தறிவு பரப்பு இயக்கம் நடத்தலும் அவ்வமிசங்களில் மிக மிக முக்கியமானவை என்றும், இத்துறைகளில் அவர்கள் ஈடுபட்டுழைத்தால் அவர்களின் ஊக்கமும், முயற்சியும் உயர்ந்திடும் என்றும், அடுத்த திட்டம் தயாராகும்போது இவ்வமிசங்களின் மீது உரியகவனம் செலுத்தப்படும் என்றும், அவற்றிற்காகும் செலவுக்கான நிதி கிடைத்திடும் என்றும் 'யுனெஸ்கோவின்' தலைமை இயக்குநர் மாஹ்யூ 'விக்டாப்பின்' தலைமைச் செயலாளர் G. கார் அவர் களுக்கு மடல் வரைந்துள்ளார். பெடான்கர்–மீஜியா அவர்கள், 'விக்டாப்' தலைமைச் செயலாளருக்கு எழுதியுள்ள மடலில் கீழ்க்கண்டவற்றைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

1. அறியாமையை அகற்றுதல், முதியோர் கல்வியை வளர்ச்சியுறச் செய்தல்.
2. ஆசிரியர்களுக்கு மேலும் பயிற்சியளித்தல்.
3. கல்வி தொடர்பான திட்டமிடுதல்.
4. உலக மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் நோக்குடன் கல்வியை உயர்த்துதல், ஐக்கிய நாட்டு அமைப்பைப்பற்றி எடுத்துரைத்தல்.
5. 'விக்டாப்பிற்குத்' தரும் பண உதவியைத் தொடர்தல்.

பெடான்கர்—மீஜியா அவர்கள் எழுதிய மடலிலிருந்து சில பகுதிகள் எடுத்துக் கீழே தரப் பட்டுள்ளன.

'விக்டாப்பும்', யுனெஸ்கோவும் எந்தக் கொள்கையின் அடிப்படையில் இயங்கி வர வேண்டும் என்று விரும்புகிறோமோ அந்தக் கொள்கையின் விளக்க அறிக்கையாக இம்மடலைக் கருத லாம். கல்வி தொடர்பான வேறு செயல்கள் 'விக்டாப்பையும்', 'யுனெஸ்கோவையும்' நெருங்கிப் பணிபுரியச் செய்யுமாயின் அச்செயல்களை இக்கொள்கை விளக்க அறிக்கை தவிர்ப்பதாகக் கொள்ளக் கூடாது.

"'யுனேஸ்கோ' பொது மாநாட்டின் பதின் மூன்றாவது கூட்டத்தில் 1965–66-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளக்கூடிய பொதுச் செயல் திட்டம் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்திட்டத்தின் முக்கியமான அமிசங்களை இங்கு நான், சுருக்கமாக எடுத்துரைக்க விரும்புகிறேன். நிதி நிலைமைக்கும், தீட்டிய திட்ட நடவடிக்கைக்கும் ஏற்ப அடுத்த வரவு செலவுத் திட்ட காலத்தில் நடக்கவிருக்கும் செயல்களை எந்த அளவுக்கு விரிவுபடுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு விரிவு படுத்த வேண்டும் என்று அக்கூட்டம் வலியுறுத்துகிறது.

"அறியாமையை அகற்றுவதற்கும், முதியோர் கல்வியை வளர்ச்சியுறச் செய்வதற்கும் 'யுனேஸ்கோ' தீட்டியுள்ள திட்டங்களில் ஆசிரியர்கள் பங்குகொள்ள வேண்டும். உங்கள் அமைப்புக்கும், யுனெஸ்கோவுக்கும் இடையிலுள்ள ஒத்துழைப்பு விரிவுபடுத்தப்படல் வேண்டும் என்று யாம் எண்ணுகிறோம். அப்போதுதான் அறியாமையை அகற்றும் இயக்கத்தையும் முதியோர் கல்வி இயக்கத்தையும் நடத்த ஆங்காங்குள்ள ஆசிரிய அமைப்புக்களின் மூலம் ஆசிரியர்களை ஒன்று திரட்ட முடியும்.

"ஆசிரியத் தொழிலின் மதிப்புத் தொடர்பான பன்னாட்டுப் பரிந்துரையைத் தயாரிப்பதில், 'விக்டாப்' முன்னமேயே குறிப்பிடத்தக்க உதவியளித்துள்ளது. அந்தச் சிக்கலைத் தொடர்ந்து ஆராய்வதன் மூலம் தங்கள் அமைப்பு எங்களுடன் ஒத்துழைக்கும் என்றும், 'யுனெஸ்கோவின்' பயண மானியத் திட்டத்தில் பங்கு கொள்ளும் என்றும் நான் நம்புகிறேன்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர்களுக்கு மேலும் பயிற்சியளிக்கும் திட்டங்கள் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்திட்டங்கள், ஆசிரியர் தொழில் திறமையை உயர்த்தும் கருவியாக உள்ளதாலும், அதன் மூலம் ஆசிரியர்களின் மதிப்பை உயர்த்துவதாலும், கல்வித் துறையில் புது முறைகளையும், தொழில் நுணுக்கங்களையும் அறிமுகப்படுத்த வழிகோலுவதாலும் அவை கல்வி வளர்ச்சிக்காகப் போடப்படும் திட்டங்களின் உயிர்நாடியாக உள்ளன. 1965—66-ஆம் ஆண்டில் 'விக்டாப்பும்' 'யுனெஸ்கோவும்' எவ்வெவ் விதங்களில் எல்லாம் ஒத்துழைக்க முடியுமோ அவற்றையெல்லாம் ஆராய்தல் வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம். அப்படிச் செய்தால்தான் மிகச் சிறந்த கல்விக்கான அடிப்படையை அமைத்தவர் ஆவோம் நாம்.

"தேசிய பன்னாட்டுக் கல்வித் திட்டங்களைத் தயாரிப்பதில் ஆசிரிய அமைப்புக்கள் ஒத்துழைப்பது இன்றியமையாதது. 'யுனெஸ்கோவும்', 'விக்டாப்பும்' தயார் செய்யும் தற்கால எதிர்காலத் திட்டங்களில், ஆசிரியர்களின் அனுபவம் முழு அளவுக்குப் பயன்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.

"ஐக்கிய நாட்டுச் சங்கத்தைப்பற்றிய அறிவை மக்களிடையே பரப்புவதற்கும், உலக மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள உதவும் கல்வியை முன்னேற்றவும் 'விக்டாப்' மேற்கொண்டுள்ள முயற்சிகள் மும்முரப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன். 'யுனெஸ்கோ' சம்பந்தமான 'விக்டாப்பின்' பொதுச் செய்தித் திட்டங்கள் விரிவுபடுத்தப்படுகின்றன. 'யுனெஸ்கோ தூதன்' (Unesco Courier) என்ற இதழை விற்பனை செய்யும் முயற்சியும் புதுப்பிக்கப்படும்.

"இனி நடக்கவிருக்கும் பொது மாநாடுகளில் என்ன முடிவுகள் எடுக்கப்படுகின்றனவோ அம்முடிவுகளுக்குக் கட்டுப்பட்ட விதத்தில், 'யுனெஸ்கோ' விக்டாப்பிற்குத் தொடர்ந்து மானியம் வழங்கும். இப்படிச் செய்வதன் மூலம் நமதிரு அமைப்புக்களின் பொதுக் குறிக்கோள்கள் யாவை எனப் புலப்படுகின்றன. 'விக்டாப்' நடத்தும் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டங்களிலெல்லாம் 'யுனேஸ்கோ' பங்கு கொள்ள முயற்சி செய்யும்.

"'யுனெஸ்கோ' மேற்கொண்ட பெருமுக்கியத்துவம் வாய்ந்த சில செயல்களைச் செய்து முடிக்க உங்கள் அமைப்பு துணை புரிந்தது குறித்து என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்ட திட்டங்கள், கல்வித் துறையில், அகன்ற, ஆழமான திட்டங்களை அமைப்பதற்கு அடிப்படைகளாக அமையும் என்று நான் நம்புகிறேன். 'விக்டாப்புடன்' நெருங்கிப் பணிபுரியும் காலத்தை மிக்க ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்."

ஐந்து நாடுகளில் அறியாமையை அகற்றும் திட்டங்கள்

கல்வி வல்லுநர் ஒருவரையும், பொருளியல் வல்லுநர் ஒருவரையும் கொண்ட ஐந்து தூதுக் குழுக்களை, 'யுனெஸ்கோ'' அல்ஜீரியா, ஈகுவேடார், ஈரான், டான்சானியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு அனுப்பியுள்ளது. அவ்வந்நாடுகளில் எழுத்தறிவு பரப்பு திட்டங்களைத் தொடங்கி வைப்பதே அக்குழுக்களின் நோக்கமாகும். உலக எழுத்தறிவு பரப்பு இயக்கத்தைப் புதுமுறையில் அணுகும் முதற்கட்டமாகும் இது.

'யுனெஸ்கோவின்' எழுத்தறிவு பரப்பு இயக்கத்தைப் பொறுத்தவரை தேர்ந்தெடுத்த நடைமுறைத் திறத்தைக் (Selection Strategy) கடைப்பிடிக்க வேண்டும் என்றும், எவ்வெந்நாடுகளில் அறியாமையை அகற்றுந்திட்டம், பொருளாதாரத் துறையையும், சமுதாயத் துறையையும் பெரும்பாலும் முன்னேற்றமோ, அவ்வந்நாடுகளில், பரிசோதனை முறையிலமைந்த மூன்றாண்டுத் திட்டங்களைத் தொடங்குவது என்றும் எழுத்தறிவு பரப்பு சம்பந்தமான 'யுனெஸ்கோ' குழுவொன்று சென்ற ஆண்டு முடிவு செய்துள்ளது. அம் முடிவைப் பின்பற்றியே மேற்குறித்த தூதுக் குழுக்கள் பணிபுரியும் 30 நாடுகள் தங்கள் நாடுகளில் எழுத்தறிவு பரப்பு திட்டம் செயற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டன. எனினும் ஐந்தே நாடுகள் (மேலே குறிக்கப்பட்டுள்ளன) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நாடுகளில் 1966-68 ஆம் ஆண்டிற்குள் எழுத்தறிவு பரப்பு திட்டம் செயற்படுத்தி முடிக்கப்படும். இப்பணி மற்ற நாடுகளில் பிறகு ஆற்றப்படும். டான்சானியாவில், முழு அளவில் எழுத்தறிவு பரப்பு ஆராய்ச்சியை எவ்வாறு நடத்துவது என்று 'விக்டாப்' ஒரு புதுத்திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது. மேற்குறித்த ஐந்து நாடுகளில், பரிசோதனை முறையில், நடத்தப்படும் திட்டங்களின் முடிவுகள் நுணுகி ஆராயப்பட்டு, மதிப்பீடு செய்யப்படும். உலக எழுத்தறிவு பரப்பு இயக்கத்தில் அடங்கும் பிறநாடுகளும் அதனால் பயனடையும் அன்றோ? பரிசோதனை முறையிலமைந்த இத்திட்டங்களை நிறைவேற்றவும், அவற்றின் முடிவுகளை நுணுகி ஆராய்ந்து, மதிப்பீடு செய்யவும் ஐந்தாண்டுகள் ஆகும்.

யுனெஸ்கோவில் ஆசிரியர்களின் தொழில், சமுதாய, பொருளாதார மதிப்பை உயர்த்தும் பிரச்சினை

மே மாதத்தில், பாரீசில், 'யுனெஸ்கோ' (70th Session of the Unesco Executive Board) செயல் நிறைவேற்று அவையின் எழுபதாவது கூட்டம் நடந்தபோது, ஆசிரியர்களின் மதிப்பை உயர்த்துவதின் முக்கியத்துவம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அக் கூட்டத்தில் பங்கு கொண்ட 18-பேச்சாளர்களும், 'யுனெஸ்கோவின்' தலைமை இயக்குநர் ரீனே மாஹ்யூ அவர்களின் புதுத் திட்டங்களுக்கு முழு ஒப்புதலளித்தனர். இத் திட்டங்களைச் செயற்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கவனத்திற்குக் கொண்டுவரும் விதத்தில் தலைமை இயக்குநரே கூட்டத்திற்கு வந்திருந்தோரை நோக்கி வேண்டுகோள் விடுத்தார்.

"உறுதியான முறையிலும், அடிப்படையையே மாற்றியமைக்கும் வகையிலும் ஆசிரியத் தொழிலின் மதிப்பை உயர்த்தவில்லை என்றால், கல்வித்துறையில் நாம் கொண்டுவர விரும்பும் சீர்திருத்தங்கள் வெற்றிபெற நாளைய சமுதாயத்திலும், இன்றைய சமுதாயத்திலும் ஆசிரியர்க்குக் கொடுக்கவேண்டிய உரிய இடம் தரப்படவில்லை யென்றால், கல்வி வளர்ச்சிக்காக எந்நோக்கோடு திட்டங்கள் தீட்டப்படுகின்றனவோ சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றனவோ அந்நோக்கம் நிறைவேறாது." என்றார் திருவாளர் மாஹ்யூ.

"பண்டைக் கிரேக்கர்களின் ஆசிரியர் (Pedagogue) ஓர் அடிமையாக இருந்தார். இந்நிலை அடியோடு மாறியமைதல் வேண்டும். குழந்தைகளுக்குச் சுதந்தரத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் முதலில் சுதந்தரமுடையவராக இருக்கவேண்டும்'' என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

தலைமை இயக்குநரால் மொழியப்பட்ட கல்வித்திட்டச் செயல் முறையைச் செயல் நிறைவேற்று அவை ஏற்றுக்கொண்டது. பரிந்துரையின் முதற்குறிப்பைச் சரிபார்த்துத் திருத்துதற்குக்

கல்வித் துறைவல்ல குழுவொன்று ஜனவரித் திங்களில் (1966) சந்திக்கும். அவ்வமயம், கல்வித் துறையில் ஆர்வம் காட்டும் அமைப்புக்களும், உறுப்பினர் நாடுகளும் கூறிய அவ்வுரைகள் கருத்திலிருத்தப்படும். ஆசிரியர்களின் தொழில், சமுதாய, பொருளாதார மதிப்புப் பற்றிய இறுதிப் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பன்னாட்டுக் கல்வி, விஞ்ஞான, கலாச்சார அமைப்பும், மன்னாட்டுத் தொழில் அமைப்பும் ஒன்றுகூடி அடுத்த ஆண்டு அனேகமாகச் செப்டம்பர்த் திங்களில் ஒரு மாநாட்டைக் கூட்டும்.

அரபு நாடுகள்......

நிருவாகத் துறையிலும், வளர்ச்சித் துறையிலும், பயிற்சித் திறனும், ஆராய்ச்சி அறிவும் நல்கும் ஆராய்ச்சி நிலையம் (The African Training and Research Centre) மார்ச் மாதத்தில், டாஞ்சியர் என்னுமிடத்தில், யுனெஸ்கோவின் தலைமை இயக்குநர் ரீனே மாஹ்யூ என்பவராலும், மொராக்கோ பல்கலைக் கழகங்களுக்கும் யுனெஸ்கோ செயல் நிறைவேற்று அவைக்கும் தலைவரான முகம்மது எல். பாசி என்பவராலும் தொடங்கி வைக்கப்பட்டது. ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த பதினேழு நாடுகளிலிருந்து வந்த வல்லுநர்கள் முன்னிலையில் அத்தொடக்க விழா நடந்தது. ஆப்பிரிக்காவில் பொது நிருவாகம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பான ஆராய்ச்சிக் கல்வியையும், ஒப்பு நோக்குதற் படிப்பையும் மேற்குறித்த நிலையம் ஊக்குவிக்கும்; ஒருமுகப்படுத்தும்; மேற்கொள்ளும் இந்நிலையத்தின் திட்டம் ஆராய்ச்சி, பயிற்சி, டாகுமென்டேஷன் என்று முப்பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக வளரும் நாடுகளிலும், குறிப்பாக ஆப்பிரிக்காவிலும் நிருவாகத் துறையில் செய்யப்படும் வெவ்வேறு பரிசோதனைகள் இந்நிலையத்தில் நன்கு ஆராயப்படும். அவ்வாய்வின் விளைவாகக் கண்டு பிடிக்கப்படும் விளைவுகள் பின்னர் ஒப்புநோக்கப்படும்.

பயிற்சி என்ற திட்டத்தின் கீழ் அரசாங்க அலுவலர்களும், பொருளாதார, சமுதாயத் துறைகளில் ஈடுபட்டுள்ள தலைவர்களும் பயனடையும் விதத்தில் இந்நிலையம் அறிஞர் அரங்கங்கள் நடத்தும்.

கப்ஃராட் (Cafrad) என்பது ஒரு சுதந்தரமுள்ள வட்டார நிறுவனமாகும். இதனை ஆளுநர் மன்றம் (Board of Governors) ஒன்று ஆளுகிறது. மொராக்கோ அரசின் பிரதிநிதியும் யுனெஸ்கோவில் தலைமை இயக்குநர் அல்லது அவரால் அனுப்பப்படும் பிரதிநிதியும், ஆப்பிரிக்க அரசாங்களின் பிரதிநிதிகளும், பன்னாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஆளுநர் மன்றத்திலுள்ள ஆளுநர்கள் ஆவர். இவ்வமைப்புக்களே மேற்குறித்த நிலையத்திற்கு நிதியுதவி வழங்கும்.

FISE—மாநாடு

ஏப்ரல் மாதத்தில் நடந்த Fise கூட்டத்தின் செய்திகளை அறிவிக்கும் முறையில், 'விக்டாப்பின்' தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் அவர்களால், 'விக்டாப்பில்' அங்கம் வகிக்கும் சங்கங்களுக்கு எழுதியுள்ள மடல் கீழ் வருமாறு:

ஆசிரியச் சங்கங்களின் உலக இணைப்பின் நான்காவது மாநாடு (The Fourth Teachers' Conference of the World Federation of Teachers' Unions. FISE.) அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜியர்சில், அல்ஜீரியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் (General Union of Algerian Workers. UGTA.) தலைமை யலுவலகத்தில், இவ்வாண்டு ஏப்ரல் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள் வரை நடந்தது. 'விக்டாப்', திரு. வில்ஹெல்ம் ஈபர்ட், திரு. பென்னெட்காலே என்ற இருவரை இம் மாநாட்டிற்கு, மாநாட்டு நடவடிக்கைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டுவர அனுப்பியது.

கூட்டத்தின் விளைவு

வளரும் நாடுகளில் எல்லாக குழந்தைகளுக்கும் கல்வியளித்தல், இந்நோக்கம் நிறைவேறும் விதத்தில் பன்னாட்டு ஆசியர்களிடையே ஒற்றுமையை வளர்த்தல், மேலும் பயற்சியளித்தல் சம்பந்தமான ஆசியர்களின் அடிப்படைக் கோரிக்கைகள், இக்கோரிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் மேற்கொள்ள வேண்டிய பொதுவான நடவடிக்கைகள் இவையே இக்கூட்டத்தின் நோக்கங்களாகும்.

உண்மையில் இந்நோக்கங்கள் அரசியல் நோக்கோடு ஆராயப்பட்டன. அவ்வமயம் சமதரும நாடுகளில் உள்ள ஏற்றமிக்க நிலைமைக்கும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள இழிநிலைமைக்கும் உள்ள பொருத்தமில்லாத்தன்மையும் எடுத்துரைக்கப்பட்டது. அண்மையில் விடுதலை பெற்ற நாடுகளின் நிலைமையும், இன்னும் விடுதலை பெறாமல் இருக்கின்ற நாடுகளின் நிலைமையும் "புதிய குடியேற்ற நாட்டுக் கொள்கை" (Neo-colonialism) என்ற கண்கொண்டு ஆராயப்பட்டன. அமெரிக்காவும், மேற்கு ஜெர்மனியும் இக்கொள்கையைப் பின்பற்றுகின்றனவென்று குறிப்பாகக் குறிப்பிடப் பட்டன. இதனைச் சமதரும நாடுகள் நல்கும் உண்மையான ஒத்துழைப்பினின்று உணர்ந்து கொள்ளலாம். அம்மாநாட்டை நடத்தியோர் இக்கொள்கையுடையோர் என்பதனை அம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளிலிருந்தும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். (அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட, 30-பக்கங்களுக்கு மேலுள்ள தீர்மானங்கள் உறுப்பினர்களுக்குத் தேவைப்பட்டால், "தேவை" என்று மடல் எழுதுக; உடனே 'விக்டாப்' செயலகத்தினின்று அனுப்பப்படும்.)

"முதலாளித்துவ அமைப்பில் எழும் பொருளாதாரப் போட்டிக்கு ஏற்பவும், அறிவியல் துறையிலும், தொழில் நுணுக்கத் துறையிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு ஏற்பவும், அரசாங்கம் இயற்றும் சீர்திருத்தச் சட்டங்கள் என்ற எல்லைக்குள் நின்று, கல்வித் துறையில் மாறுதல்கள் செய்ய முதலாளித்துவ நாடுகளில் முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆனால், சமதரும நாடுகளில் இம் முயற்சிகள் கல்வித் துறையிலேயே செய்யப்படுகின்றன. இதன் விளைவுகள் நமக்கு நன்கு தெரிகின்றன" என்று அம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. Fise-யின் தலைவர் பால் டிலாரோ அவர்கள் சமர்ப்பித்த, அறிமுக அறிக்கையில் வளரும் நாடுகளின் கல்வித் தேவைகளைக் குறிப்பிட்டுள்ளபோதிலும், ஒருதலைச் சார்பாகத் தொடக்க நிலைக் கல்வியும், இடைநிலைக் கல்வியும் சமதரும நாடுகளின் தனிச் சிறப்பு எனக் கூறியுள்ளார். தேசிய ஆசிரியர்ச் சங்கங்களின் மூலம் மற்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள கல்வித் துறை முன்னேற்றங்களை அவ்வறிக்கை புறக்கணிக்கிறது.

இச்சூழ்நிலையில், அம்மாநாடு 15 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவற்றில் சில பொதுத்தன்மையுடையன. சில சிறப்புத்தன்மை கொண்டன.

1. பொதுக் கல்வி தொடர்பான பொருளாதார, சமுதாயப பிரச்சினைகள்.
2. நாட்டுப்புறப் பகுதிகளில் கல்வியளித்தல்.
3. ஆசிரியரிடையே ஒத்துழைப்பும், பன்னாட்டு ஒற்றுமையும்.
4. எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வியளிக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப் படையில் எழுந்துள்ள ஆசிரியர்த் தொழில் தொடர்பான பிரச்சினைகள்.
5. துரிதப்படுத்தப்பட்ட பயிற்சியும், ஆசிரியர்களைத் தயார் செய்தலும்.
6. ஸ்பெயின்.
7. மலேசியா, சிங்கப்பூர், வடகலிமான்டன்.
8. ஏகாதிபத்தியம்.
9. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இனவேறுபாடு.
10. காங்கோ (லியா போல்டு வில்லி).
11. தென் கொரியா.
12. இலத்தீன் அமெரிக்கா.
13. அரபு நாடுகள்.
14. வியட்நாம்.
15. பொதுத் தீர்மானம்.

இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட விதம் கீழ் வருமாறு :

1. தீர்மானங்கள படிக்கப்பட்டன.

2. தீர்மானங்களின் படிகள் கூட்டத்திற்கு வந்திருந்தோருக்குத் தீர்மானங்களைப் படிப் பதற்குச் சிறிது நேரத்திற்கு முன்போ, படிக்கும்போதோ வழங்கப்பட்டன. (வியட்நாம் தொடர் பான தீர்மானம் வழங்கப்படவில்லை).

3. கூட்டத் தலைவர் இத்தீர்மானங்களை ஆதரிப்போர் யாவர் என்றும், (சில சமயம் 15 கைகளும், சில சமயம் 32 கைகளும் உயர்த்தப்பட்டன) எதிர்ப்போர் யாவர் என்றும் கேட்டார். (எதிர்ப்பேயில்லை) இவ்வாறு எல்லாப் 15 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன என்று அறிவிக் கப்பட்டது. மாநாடு நடந்த இறுதி நாளில், இப்பதினைந்து தீர்மானங்களும் (சில தீர்மானங்கள் மிக்க நீளமுடையவை) $1\frac{1}{4}$ மணி நேரத்திற்குள் படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

கல்வி சம்பந்தமான பொதுவான தீர்மானங்கள் ஒருதலைச் சார்புடையனவாக இருந்தன. இலத்தின் அமெரிக்காவில் கல்வி என்ற 12-ஆவது தீர்மானம் பிரேசில், பராகுவே, ஹைடி, நிகர குவா, குவாடி மாலா, வெனிசுலா அரசாங்கங்களைத் தூற்றுவதையும், கியூபா அரசாங்கத்தைப் போற்று வதையும் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக எடுத்துக் காட்டலாம். “தனியுரிமைத் தனவந்தர்கள் நடத்தும் தொழில்களுக்கு இளைஞர்களைத் தயாரிப்பதே முதலாளித்துவ நாடுகளில் வழங்கப்படும் கல்வியின் நோக்கம்” என்ற காரணம் காட்டி, துரிதப்படுத்தப்பட்ட பயிற்சியும், ஆசிரியர்களைத் தயார்ப் படுத்தலும் என்ற ஐந்தாம தீர்மானம் முதலாளித்துவ நாடுகளைத் தாக்குகிறது. ஆனால், அதே நேரத் தில், அதே தீர்மானம் சமதரும நாடுகள் கல்வித் துறையில் செய்யும் முயற்சிகளைப் பாராட்டுகிறது.

கல்வித் துறையில் என்னென்ன சாதனைகள் எந்தெந்த நாடுகளில்—அவை சிறிய நாடுகளாக இருந்தாலும் சரி, பெரிய நாடுகளாக இருந்தாலும் சரி, சாதிக்கப்படுகின்றனவோ அவை நன்கு ஆயப் பட்டு எல்லா நாடுகளின் நன்மைக்கும் பயன்படுத்தப்படவேண்டும் என்று ‘விக்டாப்’ வலியுறுத்தி வந்திருக்கிறது. கடந்த, தற்கால அரசியலாலும், குடியேற்ற நாட்டுக் கொள்கையாலும் ஏற்பட் டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கக் கல்வி வசதிகளைப் பெருக்க வேண்டியதன் தேவை தெளிவாக உணரப் படுகிறது. இப்பொருள் மீது ‘விக்டாப்’ தன் கருத்துக்களை அடிக்கடி அரசியல் சார்பின்றி எடுத் துரைத்து வந்துள்ளது. ஆனால், Fise—மாநாட்டின் சிந்தனைகள் அரசியல் சார்புடையனவாக உள்ளன. அல்பேனியப் பேரரசு ருஷ்யாவைக் குறை கூறிப்பேசும் போது, மாநாட்டுத் தலைவர் அவரைப் பேசவிடாமல் தடுத்து விட்டார். இந்தியப் பேராளி ஒருவர், அல்பேனியப் பேராளின் கருத்தைத் தாம் ஏற்கவில்லையென்றாலும், அவர் தமது கருத்தை எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் தர வேண்டும் என்று கூற அவரும் தலைவரால் உட்கார வைக்கப்பட்டார்.

பங்கேற்ற நாடுகள்

இம்மாநாடு அரசியல் தன்மையுடைய மாநாடு என்பதை அறிந்தோம்; இப்போது அம் மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் யாவை என்பதையும் அறிவோம். “நான்காவது பன்னாட்டு ஆசிரி யர் மாநாடு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரை, அல்ஜீரியாவில் 67 நாடுகள் பங்குகொள்ளக் கூடுகிறது” என்று ஒவ்வொரு தீர்மானமும் தொடங்குகிறது. மாநாடு நடக்கும் போது மாநாட்டில் பங்குகொள்ளும் நாடுகளின் பட்டியல் வழங்கப்படவில்லை; இறுதி நாளில்தான் வழங்கப்பட்டது. இந்தப் பட்டியலில் அறுபத்துநான்கே நாடுகள் குறிப்பிடபபட்டுள்ளன. அந்த நாடு எவ்வமைப்புக்களைச் சேர்ந்தவை என்பதும், மாநாட்டில் அவற்றின் நிலை என்ன என்பதும் அப் பட்டியலில் குறிப்பிடப்படவில்லை. எல்லோருக்கும் அங்கே சரியாசனம் வழங்கப்பட்டது. அவரவர் ஆசனங்களில் அவரவர் நாடுகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அந்நாடுகளின் பெயர்கள் கீழ்வருமாறு :

ஏடன், அல்பேனியா, அல்ஜீரியா, அங்கோலா, அர்ஜண்டினா, ஆஸ்த்ரேலியா, ஆஸ்த்திரியா, பெக்குவானலாண்டு, பொலிவியா, பல்கேரியா, கம்போடியா, காமரூன், சாட்சிலி, சீனா, கொலம்பியா, காங்கோ, (பிரேசாவில்லி), கோஸ்டாரிகா, கியூபா, சிப்ரஸ், செக்கோஸ்லொவேகியா, டென்மார்க், எதியோபியா, பின்லாந்து, பிரான்சு, காம்பியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, கிரேட் பிரிட்டன், கிரீஸ், கினியா (போர்ச்சுகீஸ்), ஹாங்காங், ஹங்கேரி, இத்தாலி, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், கென்யா, கொரியா, லெபனான், மாலி, மொராக்கோ, மாலிடானியா, மெக்ஸிகோ, மங்கோலியா, பெரு, போலந்து, ருமேனியா, சியராலியோனி, சோமாலியா, ஸ்பெயின், சூடான், சிரிய அராபியக் குடியரசு, டோகோ, டுனிசியா, டர்க்கி, உகாண்டா, தென் ஆப்பிரிக்கா, ஐக்கிய அரபுக் குடியரசு, மேல் ருவால்டா, உருகுவே, ருஷ்யா, வெனிசுலா, வியட்நாம், சாம்பியா.

அம்மாநாட்டில் கலந்துகொண்ட 64-நாடுகளில், பாதிக்குமேல் அதிகாரபூர்வமான பேராட்க

ளல்லர். கீழே கொடுக்கப்பட்டிருப்பதைப் படித்துப் பார்த்தால், மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவத் தனமை விளங்கும்.

அர்ஜெண்டினு : (Education Popular) என்ற பத்திரிக்கையின் சார்பில் 3-பத்திரிக்கையாளர்கள் வந்திருந்தனர்.

ஆஸ்திரேலியா : பார்வையாளராக வந்திருந்த அம்மையார் தாம் ஆஸ்திரேலிய ஆசிரியக் கூட்டணைப்பின் சார்பில் வரவில்லை யென்றும், நியூ சவுத் வேல்ஸ் ஆசிரியர்க் கூட்டிணைப்பின் சார்பில் வந்திருப்பதாகவும் தெளிவாகக் கூறினுர்.

ஆஸ்திரியா : ஒரு சிறு ஆசிரியர்க் கூட்டத்திலிருந்து வந்திருப்பதாக அந்நாட்டுப் பிரதிநிதி ஒருவர் கூறினுர்.

கம்போடியா : நாம்பென்னிலுள்ள ஆசிரிய உறுப்பினர்ச் சங்கத்திலிருந்து பார்வையாளர் ஒருவர் வந்திருந்தார்.

சாட் : SIMEPT—ஐச்சார்ந்த பார்வையாளர் ஒருவர்.

கோஸ்ட்டாரிகா : அல்ஜியர்சிலுள்ள கியூபாத் தூதுவரகத்தில் வேலைக்கமரப்போவதாக ஒரு நங்கையார் நவின்ருர்.

டென்மார்க்: இளம் ஆசிரியர் அமைப்பைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி நம்நாட்டு ஆசிரியச் சங்கங்களின் ஒன்றின்பின் சார்பில் வரவில்லை என்று கூறினுர்.

பின்லாந்து : தனிப்பட்ட முறையில் பள்ளி இயக்குநர் ஒருவர் வந்திருந்தார்.

பிரான்சு : இரு சிறுபான்மை அமைப்புக்களின் சார்பிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள்.

காம்பியா : காம்பியா ஆசிரியர்ச் சங்கத்தின் சார்பில் வந்த பார்வையாளர் ஒருவர்.

கிரேட் பிரட்டன் : 20 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய ஆசிரியர் ஒன்றின்பின் (National Union of Teachers) தலைவராக விளங்கிய ஒருவர் தனிப்பட்ட முறையில் வந்திருந்தார்.

கிரீஸ் : "முக்கிய ஆசிரியச் சங்கங்களின் பிரதிநிதிகளாக வரவில்லை என்றும், முன்னேற்ற ஆசிரியச் சங்கத்தின் பிரதிநிதிகளாக வந்திருக்கிறேம்" என்றும் இருவர் கூறினர்.

ஹாங்காங் : உலகம் சுற்றும் மனிதர் ஒருவர் மாநாடு பற்றிக் கேள்விப்பட்டு மாநாட்டிற்கு வந்தார்.

இத்தாலி : ADESSPI—ஐச்சேர்ந்த பிரதிநிதிகள் பலர்.

இந்தியா : கல்கத்தாவிலுள்ள ஆசிரியச் சங்கம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர்.

சிரியா : ஆசிரியச் சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படாத ஆனுல் அரசரால் நியமிக்கப்பட்ட பேராட்கள் சிலர்.

டூனீசியா : ஆசிரிய அமைப்பு ஒன்றின் பார்வையாளர் ஒருவர்.

டர்க்கி : ஆசிரியச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர், FISE-ன் அழைப்பிற்கிணங்க மாநாட்டிற்கு வந்ததாகவும், தாம் சார்ந்துள்ள ஆசிரிய அமைப்பு மாநாட்டிற்குச் செல்லுமாறு நம்மை நியமிக்கவில்லை யென்றும் கூறினுர்.

தென் ஆப்பிரிக்கா : ஆசிரியர் அல்லாத ஆசிரிய அமைப்போடு தொடர்பு கொள்ளாத ஆனுல் அரசியலில் ஈடுபட்டுள்ள ஒருவர்.

வெனிசூலா : பட்டதாரிகளை உறுப்பினராகக் கொண்ட அமைப்பின் பார்வையாளர் ஒருவர்.

கென்யா, எதியோபியா, சியர்ராலியோனி, உகாண்டா, சாம்பியா : அவ்வைந்து நாடுகளிலுமுள்ள தேசிய ஆசிரியச் சங்கங்களின் பார்வையாளர்கள் கூட்டறிக்கை ஒன்றைப் படித்தனர். அதன் முக்கியக் கருத்துக் கீழ் வருமாறு.

FISE-ன் உறுப்பினர்களாக அவர்கள் இல்லாததால், அமைதியான பார்வையாளர்களாய் இருக்க அவர்கள் விரும்புவதாகவும், மாநாட்டில் நிறைவேற்றப்படும் அறிக்கைகள், முடிவுகள் அல்லது தீர்மானங்கள் முதலியவற்றுடன் தம்மையோ தாம் சார்ந்துள்ள அமைப்புகளையோ தொடர்புபடுத்திக்கொள்ளத் தமக்கு உரிமையில்லை என்றும் அவர்கள் அவ்வறிக்கையில் கூறியுள்ளனர்.

மீதமுள்ள நாடுகளில் குறைந்தது 10 நாடுகளின் நிலைமையாவது ஐயப்பாட்டிற்கு உரியதாக உள்ளது. அந்நாடுகளைப்பற்றிய உறுதியான முடிவிற்கு வருவதற்கு 'விக்டாப்' பார்வையாளர்களுக்குத் தேவையான செய்தி கிடைக்கவில்லை.

மாநாட்டுத் தீர்மானங்கள் 64 நாடுகளின் பெயரில் வெளியிடப்பட்ட போதிலும், ஏறத்தாழ 30 நாடுகளே அத்தீர்மானங்களுடன் தம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள முடிந்தது என்ற உண்மையை மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். சில பிரதிநிதிகள் அல்லாதவர்களும் வாக்கெடுப்பில் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தின் மீது விழுந்த, அதிக பட்ச வாக்குகளின் எண்ணிக்கை 32 ஆகும். (ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் அங்கே வாக்கெடுப்பு நடந்தது).

உரையாடல்கள்

ஆறு முக்கிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மாநாட்டின் உரையாடல்கள் நடைபெற்றன.

பால்டிலினே அவர்களால் தயாரிக்கப்பட்ட அறிமுக அறிக்கை.

நிகழ்ச்சி நிரலிலுள்ள முதல் செய்திபற்றிய அறிக்கைகள் (வளரும் நாடுகளில் எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வியளித்தல், இந்நோக்கத்தை நிறைவேற்றும் நோக்குடன் பன்னாட்டு ஆசிரியர்களிடையே ஒற்றுமையை வளர்த்தல்) உருகுவேவைச் சேர்ந்த ஜெசுவால்டோ சோசாவால் தயாரிக்கப்பட்ட இலத்தீன் அமெரிக்காவில் நிலைமை என்ற அறிக்கை. சௌலிகாலைச் சேர்ந்த குவாரிக்கிடயாரா என்பவரால் தயாரிக்கப்பட்ட ஆப்பிரிக்காவில் நிலைமை என்ற அறிக்கை. இந்தோனேஷியாவைச் சேர்ந்த உசேன் சுபாண்ட்ரியோ என்பவரால் தயாரிக்கப்பட்ட ஆசியாவில் நிலைமை என்ற அறிக்கை.

பிரான்சைச் சேர்ந்த பெர்னண்ட ஹோஸ்ட்டாலியர் என்பவரால் தயாரிக்கப்பட்ட பன்னாட்டு ஆசிரியர்களிடையே ஒத்துழைப்பு என்ற அறிக்கை.

U. S. S. R. ஐச் சேர்ந்த தமாரா ரீ. யாநவ்கோவ்ஸ்கயா என்பவரால் தயாரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மேலும் பயிற்சியளித்தல் சம்பந்தமான அறிக்கை.

முடிவுகள்

1. கல்வித் தேவைகளைப் பற்றியும், சிக்கல்களைப் பற்றியும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தற்குப் பயனுள்ள கூட்டமொன்றை நடத்துதற்கான ஏற்பாடுகளை அல்ஜீரிய ஆசிரியர் அமைப்புச் செய்ததால், அவ்வமைப்பு நம் பாராட்டுதலுக்குரியது.

2. அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட கல்வித்துறை சம்பந்தமான தீர்மானங்கள், அத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்தனவாய் இருப்பதைக் காட்டிலும், அரசியல் துறையில் ஆர்வம் காட்டுவனவாய் இருக்கின்றன. மற்றத் தீர்மானங்கள் முழுக்க முழுக்க அரசியல் தன்மையுடையனவாய் இருக்கின்றன.

3. உலகப் பிரதிநிதித்துவம் எங்களுக்கு உண்டென்று மாநாடு தம்பட்டம் தட்டிக்கொண்டது; அது பொய்யென்று தெரிகிறது. 64-நாடுகளின் பிரதிநிதிகளின் பெயரால் வெளியிடப்பட்ட தீர்மானங்கள் ஏறத்தாழ 30-நாடுகளின் பிரதிநிதிகளின் வாக்குகளால்தான் நிறைவேற்றப்பட்டன என்பதொன்றே இதற்குப் போதிய சான்றாகும்.

4. மாநாட்டிற் கலந்துகொள்வோர் தங்கள் கருத்துக்களைத் தங்குதடையின்றி எடுத்துச் சொல்ல அனுமதிக்கப்படவில்லை. கூட்டம் தொடர்பான அடிப்படைச் செய்திகளைப் பற்றியும், தீர்மானங்களின் முதற் குறிப்புக்களைப் பற்றியும் ஆராய்ந்து பார்க்க அவர்களுக்குப் போதுமான நேரமில்லை.

FISE மாநாட்டிற்கு வந்திருந்த உங்கள் பார்வையாளரின் சார்பில், இவ்வறிக்கையைத் தங்களுக்கு அனுப்ப மகிழ்ச்சியடைகிறேன். அறிக்கை சம்பந்தமாகவோ கூட்டம் தொடர்பாகவோ நீங்கள் ஏதாவது கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினல், அக்கருத்துக்களை மிக்க மகிழ்வுடன் வரவேற்பேன். அப்போதுதான் அக்கருத்துக்கள் 'விக்டாப்' செயல் நிறைவேற்று குழுவிற்கு அனுப்பப்படும். ஆடிஸ் அபாபாவில் நடைபெறவிருக்கும் 'விக்டாப்' பேராள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அறிக்கையில் அக்கருத்துக்களும் எதிரொலிக்கப்படும்.